# இல்லந்தோறும் ஸ்டாலினின் குரல்!



செம்மையா ரீச் ஆகிட்டிருக்கு. நான் சென்று கொண்டிருக்கும் கிராமங்களில்... மக்களை பார்க்கப் பார்க்க... அவர்களிடம் பேசப்பேச... நான் உட்பட, என்னுடன் வரும் கட்சிக்காரர்களுக்கே உற்சாகம் தொற்றிக்கொண்டு விட்டது..!

கடந்த இரண்டரை ஆண்டுகால விடியல் ஆட்சியின் முக்கியமான சில பல சாதனைகளை மட்டும் பட்டியலிட்ட நோட்டீஸ் ஒன்று ஒவ்வொரு வீட்டிலும் இருக்கும் குடும்ப தலைவிகளை அழைத்துக் கொடுப்போம். இதை முழுசா படிச்சுப்பாருங்க... இந்த பட்டியல்ல, நீங்க பலன் பெற்ற, நீங்க பயன்படுத்திக் கொண்டிருக்கும் திட்டங்கள் இருந்தா சொல்லுங்கன்னு சொல்லும் போதே... ஒவ்வொரு பெண்ணும், தாமாகவே முன்வந்து, 1000 ரூபாய் உரிமைத் தொகை கிடைக்குதுண்ணே... டவுன் பஸ்ல ஃப்ரீயா போறேண்ணே. இப்படியாக சொல்கிறார்கள்..!

அப்படி தாமாக முன்வந்து சொல்ல தயங்குபவர்களிடம், இதெல்லாம் உங்களுக்கு வருதா..?! கிடைக்குதா..?! பயன்படுத்துறீங்களான்னு கேட்டால்... மகிழ்ச்சியான அக்ஸெப்டன்ஸ் வருகிறது.

நான் செல்வது கிராமப்பகுதிகள் என்பதால், கிட்டத்தட்ட பாதி வீடுகளுக்கு மேல், அவர்கள் வீட்டு பிள்ளைகளுக்கு காலை சிற்றுண்டி திட்டம் கிடைப்பதை மகிழ்ச்சியோடு பகிர்ந்துகொள்கிறார்கள்.

பத்து வீட்டிற்கு ஒரு வீட்டிலாவது.... புதுமைப்பெண் திட்டத்தால் மாதம் 1000 ரூபாய் பலன் பெறும் கல்லூரி மாணவி ஒருவர் இருக்கிறார். எங்க ஆம்பள பசங்களுக்கும் கிடைச்சா நல்லாருக்கும்ண்ணே என்று கேட்பவர்களிடம்... இந்த பட்ஜெட்டில் தலைவர் அதையும் அறிவிச்சிட்டார்ன்னு சொன்னவுடன்... ஒரு பெண் துள்ளிக்குதித்து கைத்தட்டியவாறே மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்...!

நான் முதல்வன் திட்டத்தில் திறன்மேம்பாட்டு பயிற்சி, மாணவ மாணவிகளிடையே நன்கு ஊடுருவியிருக்கின்றதை காணமுடிந்தது..! நான் இதுவரை பார்த்ததில் நம்மைக் காக்கும் 48 மணி நேரம் திட்டத்தால் பலனடைந்து உயிர் பிழைத்து ஒரு அதிமுக தோழர், தலைவரின் அதி தீவிர விசுவாசியாக பேசியதை கேட்ட பொழுது எங்கள் எல்லோருக்குமே கண்கள் பனித்து விட்டன...!

எல்லாத்துக்கும் மேல... முதல்வரின் கிராமப்புற சாலைகள் திட்டம், அட்டகாசமான பேசுபொருளாக கிராமங்களில் இருக்கின்றது. ஒவ்வொரு தெருவும் புதிதாக புனரமைக்கப்பட்டது போல பளீர் என்று இருப்பதை மக்கள் ரொம்பவே ரசிக்கின்றனர்...!

ஒரு வீட்டில் எண்பது வயதிற்கு மேலான பாரம்பரியமான அதிமுக கணவன் மனைவி... அந்த பாட்டியிடம் விளக்கிவிட்டு, வேறு எந்த குறை இருந்தாலும், கேட்டுட்டு வரச்சொல்லித் தான் தலைவர் எங்களை எல்லாம் உங்கள் ஒவ்வொருவர் வீட்டுக்கும் அனுப்பியிருக்கார்... நீங்க ஏதாவது... குறையோ, தேவையோ, கோரிக்கையோ சொன்னால் அதை நாங்க எழுதிட்டுப் போய்... அதை தலைவர் உடனே சரி செய்து கொடுத்திடுவார் என்ற பொழுது... அந்த பொக்கை வாய் பாட்டி, சிரித்தவாறே சொன்னார்... ஒரு தேவையும் இல்ல தம்பி... எனக்கு ஓ ஏ பி 1200 ரூவா வருது... எங்க ரெண்டு மருமகள்களுக்கும் 1000 ரூவா வருது... டவுன் பஸ்ல ஃப்ரீயா கும்பகோணம், மாயாரம், திருவாரூர்ன்னு போய்ட்டு வர்றோம்... எங்க பேரப்பசங்க கான்வெண்ட்ல படிக்கிதுங்க... அதுங்கள கவர்மெண்ட் ஸ்கூல்ல அடுத்த வருஷம் சேர்த்துடலாம்ன்னு இருக்கோம்... காலை டிஃபனும் ஃப்ரீயாம்ல..?! அப்றம் காலேஜ் போனா மாசம் 1000 ரூபாயாம்ல..?!

ரொம்ப மகிழ்ச்சியா இருக்கோம்ன்னு உங்க தலைவர்ட்ட சொல்லிடுங்க.... ரோடு தான் ரொம்ப காலமா... படு மோசமா இருந்திச்சி. இப்போ அதையும் டவுன்ல இருக்குற ரோடு மாதிரி போட்டு கொடுத்திட்டாங்க. பசங்க தான் அதுல வேக வேகமா பைக்ல போறாங்க... பயமா இருக்கு... வேகத்தடை (ஸ்பீட் பிரேக்கர்) போட்டு கொடுத்தா நல்லாயிருக்கும் தம்பி... அத மட்டும் எழுதிக்குங்க...

அந்த அம்மா நிறுத்தி நிதானமாக பேசியது.... ச்சான்ஸே இல்லை ஒவ்வொரு வீட்டிலும் தலைவர் போய் சிம்மாசனம் போட்டு உட்கார்ந்து விட்டிருப்பதை அப்பட்டமாக உணர்த்தியது..!

உள்ளூர் கட்சிக்காரர்களுக்கு எல்லாம் ரொம்ப திருப்தி... அதோட ரொம்ப பெருமையாக வேறு ஃபீல் பண்ண ஆரம்பிச்சிட்டாங்க. அண்ணே இந்த பக்கம்ல்லாம் கொஞ்சம் பிரச்சினைன்னாலும், நாம ஓட்டுக்கேட்டு வரும் போது... பிலு பிலுன்னு பிடிச்சிப்பாங்கண்ணே... இப்போ என்ன குறை இருக்குன்னு கேட்டா கூட யோசிச்சி யோசிச்சி தான் சொல்ல முடியுது... பல பேர் குறையே இல்லன்னு சொல்றத இப்பத்தாண்ணே முதன் முறையா கேட்கிறேன் என்று உணர்ச்சிவசப்படுகின்றனர்..!

பொதுவான கிராமப்புற மக்களின் கோரிக்கையாக இருந்தது காங்க்ரீட் வீடு தான். கலைஞர் கனவு இல்லம் திட்டம் வந்திருப்பதை எடுத்துச் சொல்லி, அதில் மூனரை லட்சம் என்பதையும் சொல்லி, உங்கள் வீடுகள் விரைவில் காங்க்ரீட் கூரை பெறும் என்றவுடன் நிம்மதியடைகின்றனர்.

ஒரு ஆட்சின்னா என்ன..?! ஒரு அரசன்னா எப்படி இருக்கனும்ங்கறத தலைவர் தளபதியார், இனி வரும் ஆட்சியாளர்களுக்கு அளவுகோல் எனப்படும் யார்ட் ஸ்டிக்கை நிர்ணயம் செய்து விட்டிருக்கின்றார். ஒரு நல்ல ஆட்சியாளரின் செயல்பாடுகளுக்கான புதிய சிலபஸையே உருவாக்கியிருக்கின்றார்..!

தன்னுடைய நெஞ்சுக்கு நீதியுடன், நேர்மையுடன் மக்களுக்காக திட்டங்களை தீட்டி ஆண்டு கொண்டிருக்கின்றோம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்த காரணத்தினால் தான்...

தன் கட்சித் தோழர்களை... இல்லந்தோறும் செல்லுங்கள்... என்னுடைய குரலாக ஒவ்வொரு குடும்பத்தினரிடமும், நாம் இரண்டரை ஆண்டு காலத்தில் செய்த சாதனைகளை எடுத்துச் சொல்லுங்கள்... இதற்கு மேல், அவர்களுக்கு என்னென்ன தேவைகள் இருக்கின்றதோ அதை எழுத்திக் கொண்டு வாருங்கள்... அவற்றையும் படிப்படியாக தீர்த்து வைப்போம் என்று தைரியமாக அவரால் சொல்ல முடிந்திருக்கின்றது..!

எந்தவொரு அரசனுக்கு மக்களை சந்திக்கும் தைரியம் இருக்கின்றதோ, அப்படி சந்திக்கும் போது... மக்கள் அவரை கரித்துக் கொட்டாமல், கரிசனத்தோடு வாழ்த்தும் நிலை இருக்கின்றதோ... அந்த அரசன் தான், அந்த நாடு என்ற நிலப்பரப்பை மட்டுமல்லாது... அந்த நாட்டில் வாழும் குடிமக்களின் மனங்களையும் வென்ற சக்கரவர்த்தியாகின்றார்...!

அந்த வகையில் தலைவர் தளபதியார், தமிழ்நாட்டின் சக்கரவர்த்தியாக திகழ்கின்றார்...!

எவனெவனோ... ஊடகவியலாளர், அரசியல் விமர்சகர் என்ற பெயர்களில் நான்கு சுவற்றுக்கு உள்ளே ஏசியை போட்டு உட்கார்ந்து கொண்டு, கேமரா முன்பாக தலைவரையும், இந்த ஆட்சியையும் பற்றி குறை கூறிக்கொண்டு திரிவதைக் கண்டால், இப்ப சிரிப்புத்தான் வருது..!

எங்களைப் போன்றவர்களுக்கு எல்லாம், மக்களை நேரடியாக சென்று பார்த்துப் பேசியபின்பாக வரும் அந்த பெருமிதம், தலைவருக்கு ஏற்கனவே நன்றாக தெரிந்திருக்கின்றது. காரணம் அவர் தானே மக்கள் இடத்திலிருந்து சிந்தித்து சிந்தித்து... பார்த்துப் பார்த்து ஒவ்வொரு திட்டமாக தீட்டியிருக்கின்றார்..!

அதனால் தான் அவர் இந்த சில ஊடக புரோக்கர்களின் தரம் கெட்ட விமர்சனங்களை கொஞ்சம் கூட மதிக்காமலேயே கடந்து போகின்றார் போலும்..! மக்களை பார்த்துப் பேசி விட்டு வந்த பிறகு எங்களைப் போன்ற கட்சியினருக்கும் கூட அந்த புரோக்கர்களைக் கண்டால் நகைத்துக் கொண்டே கடக்கத் தான் தோன்றுகிறது..!

தலைவர் தளபதியார்... அனைத்து நிலைகளையும் கடந்து நிற்கின்ற அரசியல் ஞானியாகவே எனக்கு காட்சி தருகின்றார்..!



**சௌமியன் வைத்தியநாதன்**
**எழுத்தாளர்**

---

### அரசு மாவட்ட மருத்துவமனைக்கு இணையாக - ரூ.15 கோடியில்

# அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனையை மேம்படுத்துதல்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் அடிக்கல் நாட்டினார்!

நெல்லை, மார்ச் 5 - முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத் துறை சார்பில் ரூபாய் 1.85 கோடி செலவில் புதிய மருத்துவக் கட்டடங்கள் ரூபாய் 15 கோடி மதிப்பில் அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனை அரசு மாவட்ட மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்துவதற்காக அடிக்கல் நாட்டு விழா நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா. ஞானதிரவியம், பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் ஆகியோர் முன்னிலையில் அடிக்கல் நாட்டினார்.

நெல்லை மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற விழாவில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை சார்பில் ரூபாய் 1.85 கோடி செலவில் புதிய மருத்துவக் கட்டடங்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று மாவட்ட ஆட்சியர் மரு. கா.ப. கார்த்திகேயன், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் சா.ஞானதிரவியம், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின், ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்தும், அதனை தொடர்ந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்த் துறை சார்பில் அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனை அரசு மாவட்ட மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்துவதற்காக ரூபாய் 15 கோடி மதிப்பில் அடிக்கலும் நாட்டினார்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து பொதுமக்கள் நலனிற்காக பல்வேறு மருத்துவ கட்டடங்களை திறந்து வைத்தும், பல்வேறு புதிய மருத்துவக் கட்டிடங்களை கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பிறகு மருத்துவத்துறை மிகப் பெரிய வளர்ச்சி அடைந்துள்ளது. முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலின்படி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் அம்பாசமுத்திரம் அரசு மருத்துவமனை அரசு மாவட்ட மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்துவதற்காக ரூபாய் 15 கோடி மதிப்பில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மேலும் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை சார்பில் நெல்லை மாவட்டம் பழவூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூபாய் 90 லட்சம் மதிப்பில் கூடுதல் கட்டிடமும், வைராவி குளம் ரூபாய் 22.75 லட்சம் மதிப்பில் செவிலியர் குடியிருப்பு, பத்தமடையில் ரூபாய் 25 லட்சம் மதிப்பில் செவிலியர் குடியிருப்பு மற்றும் ரூபாய் 25 லட்சம் மதிப்பில் மருத்துவ அலுவலர் குடியிருப்பு மற்றும் பாளையங்கோட்டை சமாதானபுரத்தில் ரூபாய் 22 லட்சம் மதிப்பில் பொது சுகாதார ஆய்வகம் என மொத்தம் ரூபாய் 1.85 கோடி மதிப்பில் புதிய மருத்துவ கட்டடங்கள் திறந்து வைக்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்கள் காணொலி காட்சி வாயிலாக மதுரை இராஜாஜி மருத்துவமனையில் ரூபாய் 342.26 கோடி மதிப்பீட்டில் 22 அறுவை சிகிச்சை மைய அரங்களுடன் மருத்துவ கட்டமைப்புகளை திறந்து வைத்தார்கள். இந்த அறுவை சிகிச்சை அரங்கத்தில் மூளை, முதுகுத்தண்டு, இருதயம் போன்ற பல்வேறு துறைகளுக்கான அரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. *operation theatre complex* என்று சொல்லக் கூடிய அதிநவீன தொழில் நுட்பங்கள் கூடிய அறுவை சிகிச்சை அரங்கங்கள் மதுரையில் திறந்து வைக்கப்பட்டது. இதுபோன்று மிக சிறந்த இருதய சிகிச்சைக்கான பிரிவு மதுரையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது இதேபோல கடந்த ஜூன் மாதம் முதலமைச்சர் அவர்கள் சென்னை கிண்டியில் கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள அரசு மருத்துவமனைகளில் தமிழ்நாட்டில் இந்த இரண்டு இடங்களில் தான் இந்த இருதய சிகிச்சை பிரிவு உள்ளது. இந்த சிறப்பான மருத்துவமனையினை மதுரை மாவட்ட மக்கள் மட்டுமல்ல சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்ட மக்களும் பயன்பெறுகின்ற வகையில் சிறப்பான மருத்துவக் கட்டமைப்புகள் மதுரையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டம் வள்ளியூரில் ரூபாய் 30 கோடி மதிப்பீட்டில் அரசு தலைமை மருத்துவமனை கொண்டு வரப்பட்டுள்ளது. இதுபோன்று அம்பாசமுத்திரத்திலும் அரசு மருத்துவமனை அரசு மாவட்ட மருத்துவமனைக்கு இணையாக மேம்படுத்துவதற்காக ரூபாய் 15 கோடி மதிப்பில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள அரசு மருத்துவ மனைகளில் அதிநவீன தொழில்நுட்பக் கருவிகள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இது போன்று தமிழ்நாட்டில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அரசு மருத்துவமனையில் பல்வேறு கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் நலனிற்காக மருத்துவத்துறைக்கு பல்வேறு வசதிகளை ஏற்படுத்தி வருகிறார்கள். பொது மக்கள் நலனில் மிகுந்த அக்கறை கொண்ட அரசாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்தார்.

நிகழ்வில் பொது சுகாதாரத்துறை கூடுதல் இயக்குனர் சோமசுந்தரம்,

இணை இயக்குனர்கள் செந்தில்குமார் (தொழுநோய்)லதா (நலபணிகள்) சுகாதாரப்பணிகள் துணை இயக்குனர் பொற்செல்வன், அம்பை நகர்மன்ற தலைவர் பிரபா கரபாண்டியன், ஒன்றியக் குழு தலைவர் சிவனு பாண்டி என்ற பரணி சேகர், மாவட்ட துணை செயலாளர் மைக்கேல், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் அருண் தவசுபாண்டியன், நகர செயலாளர் கணேசன், வைராவிகுளம் ஊராட்சி தலைவர் முத்துகிருஷ்ணன், கல்லிடைக்குறிச்சி இசக்கி பாண்டியன், வீரவநல்லூர் சுப்பையா, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வசூடாமணி, வழக்கறிஞர் தினேஷ் உள்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், மருத்துவர்கள், கழகத்தினர், பொது மக்கள் திரளாக கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் நகரில் எல்லோருக்கும் எல்லாம், நிதிநிலை அறிக்கை, திராவிட மாடல் நாயகர் 71வது பிறந்தநாள் பொதுக்கூட்டம் ஆம்பூர் நகர செயலாளர் எம்.ஆர். ஆறுமுகம் தலைமையில், தலைமைக் கழகப் பேச்சாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி பேசினார். உடன் மாவட்டக் கழக செயலாளர் க. தேவராஜ், எம்.எல்.ஏ. கதிர் ஆனந்த், எம்.பி. அ.செ. வில்வநாதன் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், இ.ஜி.சுகவனம் உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

---

### அரசு விழாக்களில் வரம்பை மீறி அரசியல் பேசுகிறார்!

# பிரதமர் மோடி பேசுவது அரசியல் ஆதாயமே என்பதில் சந்தேகமில்லை!

## “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, மார்ச் 5 - அரசு விழாக்களில் அரசியல் பேசக் கூடாது என்ற வரம்பை மீறி பட்டவர்த்தனமாக மோடி அரசியல் பேசுவது அரசியல் ஆதாயமே என்பதில் சந்தேகமில்லை என “தினகரன்” நாளேடு தலையங்கம் வெளியிட் டுள்ளது.



தினகரன்
மார்ச் 4, 2024 திங்கட்கிழமை
ஆதாய அரசியல்

தேர்தல் வந்துவிட்டாலே பிரதமர் மோடிக்கு மக்கள் ஞாபகம் வந்துவிடும். விமானத்திலும், ஹெலிகாப்டரிலும் பறந்து, பறந்து வந்து மக்களை நேரில் சந்தித்துவிட்டு, தனக்கே உரித்தான ஏற்ற இறக்க உரை வீச்சுகளை நிகழ்த்தி விட்டு போவார். வாக்காளர்கள் அப்போது அவருக்கு தெய்வமாக தெரிவர். பலமான மாநிலங்கள், பலவீனமான மாநிலங்கள் என்பதையெல்லாம் தோராயமாக கணக்கிட்டு கூட்டணிகளை உடைத்தல், இணைத்தல், காங்கிரசை பலவீனப்படுத்துதல் போன்றவை எல்லாம் அவர் சார்ந்த பாஜவுக்கு கை வந்த கலை.

அது வருமாறு:

தேர்தல் வந்துவிட்டாலே பிரதமர் மோடிக்கு மக்கள் ஞாபகம் வந்துவிடும். விமானத்திலும், ஹெலிகாப்டரிலும் பறந்து, பறந்து வந்து மக்களை நேரில் சந்தித்துவிட்டு, தனக்கே உரித்தான ஏற்ற இறக்க உரை வீச்சுகளை நிகழ்த்தி விட்டு போவார். வாக்காளர்கள் அப்போது அவருக்கு தெய்வமாக தெரிவர். பலமான மாநிலங்கள், பலவீனமான மாநிலங்கள் என்பதையெல்லாம் தோராயமாக கணக்கிட்டு கூட்டணிகளை உடைத்தல், இணைத்தல், காங்கிரசை பலவீனப்படுத்துதல் போன்றவை எல்லாம் அவர் சார்ந்த பா.ஜ.வுக்கு கை வந்த கலை.

மூன்றாவது முறையாக பிரதமராக துடிக்கும் மோடியின் வலையில் தமிழ்நாட்டில் இருந்தும் ஏதாவது மீன்கள் சிக்காதா என்கிற கணக்கு, அடிக்கடி மனக்கண்ணில் தோன்றி மறைகிறது. விளைவு தமிழ்நாட்டுக்கு இப்போது அடிக்கடி வந்து செல்கிறார்.

நீட் தேர்வு தொடங்கி, பணமதிப்பிழப்பு என ஒன்றிய அரசின் பல்வேறு திட்டங்களால் தமிழகத்தின் எதிர்காலம் பாதிக்கப்பட்டது. தமிழ்நாட்டின் வரி வருவாய் அனைத்தையும் ஜிஎஸ்டி என்கிற பெயரால் மூட்டை, மூட்டையாய் கொண்டு சென்றவர்கள், பின்னாளில் நெல்லிக்காய் அளவுக்கு திருப்பி தந்துவிட்டு நீலிக் கண்ணீர் வடித்தார்கள்.

10 ஆண்டுகளில் இந்திக்கும், சமஸ்கிருதத்திற்கும் நிதியை வாரி வழங்கிவிட்டு, இப்போது தமிழ் மொழி மீது ஈடுபாட்டோடு, தமிழ் வளர்ச்சி குறித்து பொதுக்கூட்ட மேடைகளில் பிரதமரும், ஒன்றிய அமைச்சர்களும் நாவினிக்க பேசுகின்றனர். இந்த மாயங்களுக்கு எல்லாம் காரணம் நாடாளுமன்ற தேர்தல் விரைவில் வர இருப்பதுதான்.

இத்தேர்தலுக்காக தமிழ்நாட்டில் தி.மு.க., அதிமுக கட்சிகள் எல்லாம் கூட்டணி பேச்சுவார்த்தையில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன. பாஜவுக்கோ இன்னமும் கூட்டணி தமிழகத்தில் உருப்படியாக அமையவில்லை.

தமாகா, புதிய நீதிகட்சி, ஐஜேகே, தமமுக உள்ளிட்ட சிறு, சிறு கட்சிகளே பாஜ கூட்டணிக்கு பச்சைக்கொடி காட்டியுள்ளன. பாமக, தேமுதிக உள்ளிட்ட கட்சிகள் கூட பாஜ கூட்டணி என்கிற படுகுழியில் விழ தயாரில்லை. ஓபிஎஸ், டிடிவி தினகரன் போன்றோரும் இன்னமும் முடிவு எடுத்தபாடில்லை. இந்த சூழலில் பாஜவுக்கு வாக்கு வங்கியை உருவாக்கிட பிரதமர் மோடி சூறாவளியாக சுழன்று வாக்கு சேகரித்து வருகிறார்.

கடந்த 27 மற்றும் 28ம் தேதிகளில் தமிழகம் வந்த மோடி, இரு தினங்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். திருப்பூர் மாவட்டம் பல்லடம், தூத்துக்குடி, நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை ஆகியவற்றில் பொதுக்கூட்டம் நடத்தி, பாஜ அரசின் சாதனைகளை கூறியதோடு, எதிர்க்கட்சிகளை எல்லாம் வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என சாடிவிட்டு சென்றார். இங்கு வந்து சென்ற 5 நாட்களுக்குள் மீண்டும் இன்று அவர் சென்னைக்கு வந்து கல்பாக்கம் அணுஉலை மேம்பாடுகளை பார்வையிடுவதோடு, நந்தனம் பொதுக்கூட்டத்திலும் பங்கேற்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் வரவுள்ள நிலையில், வாரம்தோறும் பிரதமர் மோடி தமிழகத்திற்கு விஜயம் தருவது பொதுமக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறது.

கடந்த டிசம்பர் மாதம் இதே சென்னையும், நெல்லை, தூத்துக்குடியும் வெள்ளத்தில் மூழ்கியபோது, பிரதமர் மோடியின் ஹெலிகாப்டரை பொதுமக்கள் தேடிக் கொண்டிருந்தனர். அப்போது பிரதமர் எங்கு சென்றார் என்றே தெரியவில்லை. 2 ஒன்றிய அமைச்சர்கள் மட்டும் வந்து சென்ற நிலையில் வெள்ள நிவாரண நிதியாக தமிழகத்திற்கு ரூ.1 கூட இதுவரை தரவில்லை. இப்போது பொதுக் கூட்டங்களிலும், அரசியல் பேசக்கூடாது என்கிற வரம்பை மீறி அரசு விழாக்களிலும் கூட பிரதமர் பட்டவர்த்தனமாக அரசியல் பேசுவது அரசியல் ஆதாயமே என்பதில் சந்தேகமே இல்லை.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அன்பில் தர்மலிங்கம்

**மார்ச் 5 (1993)**



நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம், திராவிடர் கழகம் ஆகிய இயக்கங்களில் பங்கு கொண்டதன்றி தி.மு.க. உருவானபோது கழகத்தில் முக்கிய பங்கேற்று பணியாற்றினார்.

1938ஆம் ஆண்டு நடைபெற்ற முதல் இந்தி எதிர்ப்பு போராட்டம், மும்முனைப் போராட்டம் உள்ளிட்ட அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

திருச்சி மாவட்டச் செயலாளராக 1950 முதல் 1972 வரை பணியாற்றினார்.

திருச்சி மாவட்டத்தில் 1956ஆம் ஆண்டு நடைபெற்ற தி.மு.க. 2வது மாநில மாநாட்டின் வரவேற்புக்குழுத் தலைவராக பணியாற்றியவர்.

மாநாட்டிற்கு கழகத்தவரை அண்ணா வருமாறு அழைப்பு விடுக்கும்போது அதற்காக திராவிட நாடு இதழில் எழுதிய தம்பிக்கு மடலில் “அன்பில் அழைக்கிறார்” என்றே தலைப்பிட்டு எழுதினார்.

சட்டமன்ற உறுப்பினராகவும், தலைவர் கலைஞர் அமைச்சரவையில் வேளாண்மைத் துறை மற்றும் வருவாய்த் துறை அமைச்சராகவும் பணியாற்றினார்.

தலைமைக் கழகச் சார்பில் தலைவர் கலைஞர் அவர்கள் 1986ஆம் ஆண்டு “பெரியார் விருது” வழங்கி சிறப்பித்தார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**